பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 3-50

சுடர்: 5 பிரமோதூத ஹு ஆடி மீ 28 உ செவ்வாய்க்கிழமை (14-08-1990) ஹிஜ்ரி 1410 முஹர்ரம் பிறை 22 கதிர்: 164

# அகதிகள் படகு மீது ஹெலி சூடு! நால்வர் பலி!!

யாழ்ப்பாணம், ஆக. 14

கொழும்புத்துறைப் பகுதியிலிருந்து நேற்றுக் காலை தமிழகம் நோக்கிப் புறப்பட்ட அகதிகள் படகு ஒன்றின் மீது ஸ்ரீலங்கா விமானப் படையினர் ஹெலிக்கொப்டரிலிருந்து நடத்திய தாக்குதலில் நான்கு அப்பாவித் தமிழர்கள் உயிரிழந்தனர். ஏழு பேர் படுகாயமுற்றனர்.

கொழும்புத்துறைக்கு சற்று அப்பால் கல்முனைக் கடற்பகுதியில் இந்தச் சம்பவம் இடம்பெற்றிருக்கிறது.

பெண்கள், சிறுவர்கள், வயோதிபர்கள் உட்பட சுமார் ஐம்பது பொது மக்களை ஏற்றிக்கொண்டு நேற்றுக் காலை 9 மணிக்கு புறப்பட்ட இந்தப் படகு காலை 9. 30 மணியளவில் ஹெலிக்கொப்டர் தாக்குதலுக்கு இலக்கானது.

ஹெலித் தாக்குதலினால் படகோட்டியான அகிலன் நெஞ்சில் படுகாயமுற்றார். எனினும் அந்தக் காயத்துடன் அவர் படகைத் திருப்பி- ஹெலி வேட்டுகளுக்கு மத்தியில்- கரைக்கு

(3 ஆம் பக்கம் பார்க்க)

# அரசு அனுப்பிய உணவு ஐந்து சத வீதம் மட்டுமே!

## நேற்று 'ஓய்வு'

யாழ்ப்பாணம், ஆக. 14

நீண்ட நாட்களுக்குப் பின்னர் நேற்றைய தினம் காலை முதல் மாலை வரை யாழ். நகரில் சற்று அமைதி நிலவியது.

பொம்மர்கள் 'ஓய்வு' எடுத்துக் கொண்டதால் நகர மக்கள் நிம்மதிப் பெருமூச்சு விட்டனர்.

காலையில் ஹெலி ஒன்று வட்டமிட்டு ஓரிரு இடங்களில் வேட்டுக்களைத் தீர்த்தது. [ஓ]

## வெளிச்சந்தைக் கையிருப்பே இரண்டு மாதங்களாக உதவுகிறது

யாழ்ப்பாணம், ஆகஸ்ட் 14

கடந்த ஜூன் மாதம் 14ஆம் திகதி தொடக்கம் நேற்றுவரையான இரண்டு மாதங்களுக்கு யாழ்ப்பாண மாவட்டத்தில் இப்போது வாழும் மக்களுக்குத் தேவையான அத்தியாவசிய உணவுப்பொருள்களில் சுமார் ஐந்து சத (சரியான கணக்கு 4.5 வீதம்) வீதத்தை மட்டுமே அரசாங்கம் அனுப்பி வைத்திருக்கிறது.

குடாநாட்டு மக்களுக்கு இரண்டு மாதங்களுக்கு அரிசி, மா, சீனி ஆகிய அத்தியாவசிய உணவுப் பொருள்கள் மொத்தம் இருபதினாயிரம் மெற்றிக் தொன்கள் தேவை.

வெளிமாவட்டங்களில் இருந்து அகதிகளாக வந்திருப்பவர்களுக்கு ஆறாயிரம் மெற்றிக் தொன் அத்தியாவசிய உணவுப் பொருள்கள் தேவை.

லொறிகளிலும், கப்பல்களிலுமாக ஐந்து தடவைகள் அரசாங்கம் அனுப்பிய மொத்தத் தொகையோ 1, 173 மெற்றிக் தொன்களாகும்.

இது மொத்தத் தேவையில் 4. 5 சத வீதம் மட்டுமே ஆகும்.!

கடந்த இரண்டு மாதங்களாக தனியார் - வெளிச் சந்தையில் இருந்த கையிருப்பே குடாநாட்டு மக்களின் பசி போக்கியது. இப்போது அந்தக் கையிருப்பும் கீழ் மட்டம் வரை தேய்ந்து போய்

(4ஆம் பக்கம் பார்க்க)

## தலைமன்னாரில் மோதல்; சிப்பாய்கள் அறுவர் பலி!

தலைமன்னாரில்விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதல் ஒன்றில் ஆறு இலங்கை இராணுவத்தினர் கொல்லப்பட்டனர்.

பொத்துவிலில்கண்ணிவெடியில் சிக்கி ஆறுபடையினர் காயமடைந்தனர்என்றும் -

வவுனியாவில் ஆயுதப்படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையே நடந்த மோதல் ஒன்றின்போது இரண்டு பொதுமக்கள் உயிரிழந்தனர் என்றும் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன. [ஓ-எ]

## 1,700 தொன் பொருளுடன் மற்றும் ஒரு கப்பல் வருகிறது

யாழ்ப்பாணம். ஆக. 14

கொழும்பில் இருந்து 1700 தொன் உணவுப் பொருள்களுடன் எதிர்வரும் வெள்ளிக்கிழமை மற்றும் ஒரு கப்பல் பருத்தித்துறைக்கு வரவிருக்கிறது.

யாழ்- அரச அதிபர் திரு. அன்ரன் அல்பிரட் இதனைத் தெரிவித்தார்.

பருத்தித்துறைக்கு ஏற்கனவே வந்த கப்பலில் இருந்து மா இறக்கும் வேலைகள் நேற்றுடன் முடிவடைந்தன என்றும் 450 தொன் மாவே வந்ததாகவும் அரச அதிபர் மேலும் தெரிவித்தார். [இ-3]

## புன்னாலைக்கட்டுவனில் விமானக் குண்டு வீச்சு!

### பத்துக்கும் மேற்பட்டோர் காயம்

மயிலணி, ஆக. 14

புன்னாலைக்கட்டுவன் சந்தியில் நேற்றுக் காலை சுமார் 7-30 மணியளவில் விமானக் குண்டு வீச்சுத் தாக்குதல் நடத்தப்பட்டது.

சந்தியிலுள்ள கடைகளில் பொருள்களை வாங்கிக் கொண்டு நின்றவர்கள் மீதே இந்தத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

இந்தச் சம்பவத்தில் சுமார் பத்துப் பேர் வரையில் காயமடைந்தனர். அவர்களில் சிலர் படுகாயமுற்றனர்.

ஒருவர் மிக ஆபத்தான நிலையில் ஆஸ்பத்திரிக்குக் கொண்டு செல்லப்பட்டார். அவர் பின்னர் உயிரிழந்தார் என்று தெரிவிக்கப்பட்டது. ஆனால் அதனை ஊர்ஜிதம் செய்ய முடியவில்லை.

வயாவிளான், ஏழாலை, புன்னாலைக்கட்டுவன், ஊரெழு பகுதிகளுக்கு மேலாக வட்டமிட்ட இரண்டு விமானங்களே திடீரென குண்டு வீச்சு நடத்தியதாகத் தெரிவிக்கப்பட்டது.

(ஓ-89-143)

## 4 படையினர் பலி

யாழ்ப்பாணம், ஆக. 14

கோமாரி இராணுவ முகாமில் இருந்து உழவு இயந்திரங்களிலும். பவள் வாகனங்களிலும் கடந்த சனியன்று தாண்டிக்குளம் நோக்கிச் சென்ற படையினர்மீது விடுதலைப்புலிகள் மேற்கொண்ட தாக்குதலில் 4 இராணுவத்தினர் உயிரிழந்தனர். ஐவர் காயமுற்றனர். (உ-9)

## தலைமன்னார், ஆலங்குளம் முகாம்கள் மூடப்பட்டன

யாழ்ப்பாணம், ஆக. 14

தலைமன்னார், ஆலங்குளம் ஆகிய இடங்களில் இருந்த இரண்டு இராணுவ முகாம்களும் கடந்த ஞாயிறன்று மூடப்பட்டதாகத் தெரியவருகிறது.

தலைமன்னார் இராணுவ முகாம் மூடப்பட்டு அங்கிருந்த படையினர் கடற்படை முகாமுக்கு அனுப்பப்பட்டனர்.

ஆலங்குளம் முகாமிலிருந்த படையினர் முகாமை மூடிவிட்டு, செட்டிகுளம் வழி

(4ஆம் பக்கம் பார்க்க)

## வீரமரணம்

யாழ்ப்பாணம், ஆக. 14

சுண்டிக்குளம் பகுதியில் கடந்த சனியன்று கடற்படை படகு ஒன்றின் மீது விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலின் போது மதன் (திருமலை) என்ற போராளி வீரமரணமடைந்தார். (உ-9)

## நெஞ்சிலிருந்து இரத்தம் பீறிட

## பயணிகளைக் கரைசேர்த்த படகோட்டியின் தீரம்!

"ஹெலிக்கொப்டர் சூட்டுக்கு படகோட்டி இலக்கானார், அவர் நெஞ்சில் குண்டு பட்டு இரத்தம் பீறிட்டுக் கொண்டிருந்தது. அப்படி இருந்தும் - இரத்தம் சொட்டச் சொட்ட- ஹெலிக்கொப்டர் வேட்டுக்களுக்கு மத்தியில்- அவர் படகை கரைக்குக்கொண்டுவந்துசேர்த்தார். கரைசேர்ந்ததும் அவர் படகில் வீழ்ந்து மரணமானார்."

- நேற்றுக்காலை கல்முனை கடற்பகுதியில் இடம்பெற்ற ஹெலித் தாக்குதல் சம்பவத்தின் போது தப்பிவந்த- கொக்குவிலைச் சேர்ந்த ஸ்ரீஸ்கந்தராசா என்பவர் மேற்கண்ட தகவலை உதயனுக்குத் தெரிவித்தார்.

இந்தச் சம்பவம் குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தமிழகம் செல்வதற்காக முதலில் நேற்று முன்தினம் மாலை 5 மணியளவில் படகில் புறப்பட்டோம். ஆனால் படகிற்குள் தண்ணீர்

[3 ஆம் பக்கம் பார்க்க]

# வீரமுனையில் 100 தமிழர் கொலை!

கொழும்பு, ஆக. 14

சம்மாந்துறைப் பகுதியில் உள்ள வீரமுனைக் கிராமத்தில் கோயில் ஒன்றில் தஞ்சம் புகுந்திருந்த தமிழ்அகதிகளில் 21 பேரை முஸ்லிம்கள் சிலர் தாக்கிக் கொலைசெய்தனர்.

இதனையடுத்து வீரமுனைக் கிராமத்தில் இருந்த சுமார் 4 ஆயிரம் தமிழ் அகதிகளும் அம்பாறை மாவட்டத்தில் [illegible] மாற்றஞ்செய்யப்பட்டு வருவதாகத் தெரிகிறது.

இதேசமயம் —

வீரமுனைக் கிராமத்தில் சுமார் நூறு தமிழர்கள் முஸ்லிம்களினால் படுகொலை செய்யப்பட்டிருப்பதாக தமிழ் குழு ஒன்றின் பிரதிநிதி ஒருவர் தகவல் வெளியிட்டதாக ஏஜென்ஸி செய்திகள் தெரிவித்தன.

செங்கலடி அரிசி ஆலை ஒன்றில் இருந்த சுமார் 50 தமிழர்கள் முஸ்லிம் குழு ஒன்றினால் கொலை செய்யப்பட்டு, பின்னர் அவர்கள் உடல்கள் எரிக்கப்பட்டன என்றும் —

அவர்களில் பெரும்பாலானோர் பெண்கள் என்றும் அந்தப் பிரதிநிதி கூறியதாக அச்செய்திகள் மேலும் தெரிவித்தன.

ஏறாவூரில் முஸ்லிம்கள் கொல்லப்பட்டதற்கான பழி வாங்கல் நடவடிக்கையாகவே

(4ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னஞ் சிறு விளம்பரம்

**மீரா வெளியீடுகள்**

சிறுவர்களுக்கும் பெரியவர்களுக்கும் 1989ல் 1990ல் வெளிவந்த தரமான நாவல்கள் 100/- ரூபாவுக்கு புத்தகங்கள் வாங்குபவர்களுக்கு 40/- ரூபாவுக்கு புத்தகங்கள் இலவசமாக வழங்கப்படுகிறது. ஸ்ரீகாந் புத்தக சாலை, நல்லூர் கோயில் முன்புறம், யாழ்ப்பாணம். [13644]

## வயிற்றோட்டம்

கொழும்புத்துறை, ஆக. 14 யாழ். மாவட்டத்தில் உள்ள சில அகதி முகாம்களில் வயிற்றோட்ட நோய் பரவி வருகிறது.

## சாவகச்சேரியில் றொக்கட் வீச்சு

சாவகச்சேரி, ஆக. 14 சாவகச்சேரியை வட்டமிட்ட இரு பொம்மர்களில் ஒன்று கச்சாய்வீதி வீரபத்திரர் கோயில் பக்கம் றொக்கட் வீசியது. ஆலமரம் ஒன்று முறிந்ததுடன் ஒரு வீடு, கடை ஆகியவை சேதம் அடைந்தன. (இ-31)

## முல்லைத்தீவில் அரிசி விலை உயர்வு

மின்சாரத் தடை காரணமாக முல்லைத்தீவு தொடர்ந்து இருளில் மூழ்கி உள்ளது. அங்கு உள்ள அரிசி ஆலைகள் எதுவும் இயங்க முடியாது உள்ளன. இதனால் அரிசி விலை அங்கே கிலோ ரூபா 17 ஆக அதிகரித்துள்ளது. [இ-76]

## கார்த்திகை உற்சவம்

கொழும்புத்துறை, ஆக. 14 நல்லூர் ஸ்ரீ கந்தசுவாமி கோயில் பத்தொன்பதாம் திருவிழா கார்த்திகை உற்சவம் இன்று செவ்வாய்க்கிழமை மாலை ஐந்துமணிக்கு நடைபெறும். இ - 30

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

அமரர்
காசிப்பிள்ளை
சங்கரப்பிள்ளை

பிறப்பு:
15 - 06 - 1925

இறப்பு:
15 - 07 - 1990

குடும்பத்தின் ஒளிவிளக்காயும், வழிகாட்டியாகவும் திகழ்ந்து எங்களை ஆறாத்துயரில் ஆழ்த்தி விட்டு மீளாத்துயில் கொண்ட எமது அன்புத் தெய்வமே! உமது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உங்களின் பிரிவால் துயருறும்:
**மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

சண்டி றோட்,
சாவகச்சேரி. (14031)

## தமிழ் மொழி பயிற்சி பெற்ற 200 படையினர் சேவையில்

கொழும்பு, ஆக. 14 12 வார கால தமிழ்மொழி பயிற்சியை முடித்துக்கொண்ட 200 பாதுகாப்புப் படையினர் இவ் வாரம் முதல் சேவையில் ஈடுபடுத்தப்படவுள்ளனர். கொத்மலை படையினர் மொழிப்பயிற்சி நிலையத்தில் இவர்கள் பயிற்சி பெற்றனர். பயிற்சி முடிந்து வெளியேறும் நிகழ்ச்சி திங்கள் கொத்மலையில் நடைபெற்றது.

## ஓராம் ஆண்டு நினைவஞ்சலி



**செல்வன் க. சிவகுலசிங்கம்**
(இராசன்)
(பஸ் நடத்துநர் பருத்தித்துறை)

| உதிப்பு: | அழிப்பு: |
|---|---|
| 09 - 12 - 1966 | 26 - 07 - 1989 |

திதி: 14 — 08 — 1990

**திருமதி செ. லோகராணி**
[இராணி]

| உதிப்பு: | உதிர்வு: |
|---|---|
| 06 - 04 - 1963 | 18 - 06 - 1990 |

## 10ஆம் ஆண்டு நினைவஞ்சலி

**செல்வி க. இந்திரா (சந்திரா)**

வெண்ணெய் திரண்டுவர மட்தாளி உடைந்ததுபோல்
வேதனைக்குள்ளாக்கிவிட்டு விண்ணகம் சென்றவரே
இதயம் நிறைந்த எங்கள் இந்திராவே
செல்வமாய் வளர்ந்த இராணியே
அப்பனே சிவகுலசிங்கா! ஆறாத்துயர் ஆனோம்
மாசற்ற உம் முறுவல் மனதை வாட்டுதையோ
அப்பனே உனதுபணி மேற் கொள்கையிலே
அமைதி என்று வந்தவர்க்கு இரையானாய்;
நாம் அமைதியின்றித் தவிக்கிறோம
யாரை நோவோம் யாருக்கெடுத்துரைப்போம்?
ஆண்டவா!
பூவிலே கொய்தவரை உன்திருப்பாத மலராக்கிவிடு
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

[14002] குடும்பத்தினர்.

## 1 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



**கிறிஸ்ததாஸ் கதிரேசு - [சிவகுரு]**
(முன்னைநாள் வைத்திய ஆய்வுகூட நுண் ஆய்வாளர்)

| தோற்றம்: | மறைவு: |
|---|---|
| 11 - 08 - 1938 | 14 - 08 1989 |

''மற்றவர்களுக்கு ஒளி வீசி ஆனால்
உங்களுக்குள் கருகி மறைந்தீர்கள்.''
தங்கள் பிரிவால் துயருறும்
**மனைவி, பிள்ளைகள், மருமக்கள்.**

'மலரகம்'
சுன்னாகம் தெற்கு,
சுன்னாகம். [14015]

## நன்றி நவிலலும் அந்தியேட்டி அழைப்பும்



**திரு. வைரவிப்பிள்ளை வைரமுத்து**
(இளைப்பாறிய அதிபரும், காப்புறுதி முகவரும்)

| தோற்றம்: | மறைவு: |
|---|---|
| 01 - 11 - 1916 | 15 - 07 - 1990 |

அமரத்துவம் அடைந்த எமது அன்புத் தந்தை வைரமுத்து அவர்களின் இறுதிக் கிரியைகளில் கலந்தும் அனுதாபச் செய்திகளை அனுப்பியும் எமக்கு ஆறுதல்களை வழங்கிய சகலருக்கும் நன்றியை தெரிவித்துக்கொள்வதுடன் 14 - 07 - 1990 காலை 7 மணியளவில் பருத்தித்துறை எரிந்தம்மன் ஆலய மண்டபத்தில் நடைபெறும் அந்தியேட்டியிலும் வீட்டில் நடைபெறும் சபண்டீகரணக் கிரியைகளிலும் கலந்து அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மக்கள், மருமக்கள், சகோதரி,
மைத்துனர், பேரப்பிள்ளைகள்.

''அம்பிகை வாசம்''
ஐயனார் வீதி,
பருத்தித்துறை. (14011)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



செல்வன்
**பரமகுரு ஸ்கந்தகுமார்**
(பழைய மாணவன் நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம், ஹாட்லிக் கல்லூரி)

| பிறப்பு: | அழிப்பு: |
|---|---|
| 13 - 10 - 1969 | 26 - 07 - 1989 |

திதி: 14 — 08 — 1990

எங்கள் அன்புச் செல்வமே! தம்பி!
தங்கள் ஆத்ம சாந்திக்கு இறைவனை
என்றும் பிரார்த்திக்கும்.

ஐயா, அம்மா, அக்கா,
உறவினர்கள், நண்பர்கள்

கிராமக் கோட்டடி,
புலோலி. [13986]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# படை விலக்க ஈராக் நிபந்தனை
# அமெ. நிராகரிப்பு

வாஷிங்டன், ஆக.14
குவைத்தில் இருந்து தனது துருப்புகளைவிலக்கிக்கொள்ள ஈராக் விதித்த நிபந்தனைகளை அமெரிக்க அரசு நிராகரித்துவிட்டது.

ஈராக் ஜனாதிபதி சதாம் ஹுசேன் நேற்று டெலிவிஷன், வானொலி மூலம் நிகழ்த்திய உரையில் புதிய நிபந்தனைகளை வெளியிட்டார்.

நிபந்தனைகள் வருமாறு:

★ ஆக்கிரமிக்கப்பட்ட பலஸ்தீனதாயகத்தில் இருந்து இஸ்ரவேல் வெளியேற வேண்டும்.

★ சவூதி அரேபியாவில் இருந்து அமெரிக்கப் படைகள் வெளியேற வேண்டும்.

★ சவூதி அரேபியாவில் அரபுப் படைகளும், ஐ நா படைகளுமே இருக்க வேண்டும்.

★ ஈராக் மீது பொருளாதார தடையை விதிக்கும் ஐ நா தீர்மானம் விலக்கிக் கொள்ளப்படவேண்டும்.

★ லெபனானில் இருந்து சிறியபடைகள் வாபஸ்பெறப்பட வேண்டும்.

குவைத் ஆக்கிரமிப்பினால் ஈராக் தனிமைப்படுத்தப்பட்டுள்ளது என்றும் பிரச்சினையைத் திசை திருப்பச் செய்யும் தந்திரமாக இந்த நிபந்தனைகளை விதித்துள்ளது. என்றும் அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் புஷ் தெரிவித்தார்.

பலஸ்தீனப் பிரதேசத்தில் இருந்து இஸ்ரவேல் வெளியேற வேண்டும் என்ற நிபந்தனையை இஸ்ரவேல் அரசும் நிராகரித்துவிட்டது.

இதே வேளை — ஈராக்கின் எண்ணெயை ஏற்றிக்கொண்டு செல்லும் கப்பல்களை வழிமறிக்கப் போவதாக அமெரிக்கா அறிவித்து உள்ளது.

வளைகுடாவில் உஷார் நிலையில் உள்ள அமெரிக்க யுத்தக் கப்பல்களை இதற்குப் பயன்படுத்தப்போவதாக அதிபர் ஜோர்ஜ் புஷ் செய்தியாளர்களிடம் தெரிவித்தார். (இ-எ)

## வடக்கு - கிழக்கு அகதிகளுக்கு பரிசுத்த பாப்பரசர் நிதி உதவி

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் இடம் பெற்ற சம்பவங்களால் இடம் பெயர்ந்த மக்களுக்கு நிவாரணம் வழங்கப் பரிசுத்த பாப்பரசர் 30 ஆயிரம் அமெரிக்க டொலர் வழங்கியுள்ளார்.

அகதி முகாம்களில் உள்ள சிறுவர்கள், தாய்மார்களுக்கு கூடுதல் உதவிகள் வழங்க வேண்டும் என்று பணிக்கப்பட்டுள்ளது. (இ - 3)

## அகதிகளுக்கு நேரடி உதவி இல்லை என்கிறார் ரஞ்சன்

கொழும்பு, ஆக 14
அகதிகளுக்கு வெளி நாட்டவரோ, வெளிநாட்டு நிறுவனங்களோ நேரடியாக உதவிகளை வழங்கமுடியாது.

அமைச்சர் ரஞ்சன் விஜேரத்னா இத் தகவலை கடந்த வாரம் நாடாளுமன்றத்தில் வெளியிட்டார்.

அகதிகளுக்கான எந்த உதவியும் செஞ்சிலுவைச் சங்கத்தின் சர்வதேசக் குழு, அரச நிறுவனங்கள் மற்றும் பாதுகாப்புப் படைகள் ஊடாகவே வழங்கப்பட வேண்டும் என்றும் அமைச்சர் நாடாளுமன்றத்தில் கூறினார். [இ-எ]

## பெனாஸிரை விசாரிக்க விசேஷ நீதிமன்றம்

இஸ்லாமாபாத், ஆக. 14
முன்னாள் பிரதமர் பெனாஸிர் பூட்டோ மீது சுமத்தப்பட்டுள்ள ஊழல் குற்றச்சாட்டுக்களை விசாரிக்க விசேட நீதிமன்றம் அமைக்கப்படும் என்று பாகிஸ்தான் காபந்து அரசு அறிவித்திருக்கிறது.

இவ்விசேட நீதிமன்றம் முன் ஆஜராகப் போவதில்லை என்றும்-

மக்களுக்கே தான் பதிலளிக்க வேண்டியவர்; காபந்து பிரதமருக்கு அல்ல என்றும் திருமதி பூட்டோ தெரிவித்துள்ளார்.

இதனிடையில் பிரதமராக பெனாஸிர்இருந்த சமயம் அவரது அந்தரங்கச் செயளாளராகப் பணிபுரிந்தவர் உட்பட எட்டு சிரேஷ்ட அதிகாரிகளைப் பொலீஸார் கைது செய்தனர். (இ-எ)

## அகதி....

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)
கொண்டுவந்து சேர்த்தார்.

கரை வந்ததும் அவர் படகில் வீழ்ந்து உயிரிழந்தார்.

இவரை விட மேலும் மூவர் இந்தச் சம்பவத்தில் உயிரிழந்தனர்.

கன்னாதிட்டி காளி கோவிலடியைச் சேர்ந்த மெக்கானிக்கான நாகலிங்கம் ஸ்ரீ கந்தராசா (25 வயது), அவரது பெறாமகன் காளிமுத்து சுரேந்திரன் (வயது 12), செல்லையா சுரேந்திரன்(வயது 12) ஆகியோரே உயிரிழந்தவர்களாவர்.

காயமுற்ற அல்போன்ஸ் பிரசா (3 வயது), இராசக்கோன் பாரத் (3 வயது), குணமணி (34 வயது), செல்லையா கவிதாஸ்(8 வயது) ஆகியோர் மானிப்பாயில் உள்ள யாழ். போதனா ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

மற்றும் மூவர் தனியார் ஆஸ்பத்திரிகளில் சேர்க்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (உ-3)

## பயணி---

தால், வள்ளத்தை நடுவழியில் திருப்பி கரைசேர்க்க வேண்டியதாயிற்று.

மீண்டும் நேற்றுக் காலை 9 மணியளவில் வள்ளம் புறப்பட்டது ஆழ் கடலிற்குள் பிரவேசிக்கும் போது திடீர் என வள்ளத்தின் மீது ஹெலி ஒன்று வட்டமிட்டு வேட்டுக்களை தீர்த்தது

வள்ளத்தில் இருந்த ஆண்கள், பெண்கள், குழந்தைகள் ''ஐயோ'' என்று ஓலக்குரல் எழுப்பினார்கள்.

படகில் இருந்த பொதுமக்கள் தமது சட்டைகளைக் கழற்றி கைகளால் உயரப் பிடித்து அசைத்துக் காட்டியவாறு குளறினார்கள்.

ஆனால் ஹெலி வேட்டு ஓயவில்லை. விடாது ஹெலி சுட்டுக்கொண்டிருந்தது.

இதனால் படகோட்டிக்கு நெஞ்சில் குண்டு பட்டு, இரத்தம் பீறிட்டது. வள்ளத்தில் இரத்தம் வெள்ளக்காடாகியது.

அந்தக் காயத்துடன் படகோட்டி ஹெலி சுடச்சுட-வள்ளத்தை கரைக்குகொண்டு வந்து சேர்த்தார்.

படகில் இருந்தோர் படகை விட்டு இறங்கி கரைக்கு ஓடினார்கள். அப்போதும் ஹெலியினர் சூடு தொடர்ந்தது.

ஹெலி சென்ற பின்னர் படகோட்டியைப் பார்த்தோம், அவர் உயிரிழந்து கிடந்தார்.

ஹெலி வேட்டுகளுக்கு மத்தியில் படகை நோக்கி இரண்டு தடவைகள் றொக்கட் குண்டுகளையும் வீசியது. ஆனால் அவை படகுக்கு அப்பால் தள்ளிக் கடலிலேயே வீழ்ந்தன.

இந்த றொக்கட்டுகள் படகில் வீழ்ந்திருந்தால் படகும் சிதறியிருக்கும்; அதில் வந்த அனைவரும் உயிரிழந்திருப்போம்.

-இவ்வாறு அவர் மேலும் தெரிவித்தார். (உ-3)

## மாலைதீவு சென்ற குழு திரும்பியது

கொழும்பு, ஆக. 14
மாலைதீவு சென்ற அனைத்துக் கட்சி நாடாளுமன்றக் குழு கடந்த ஞாயிறு கொழும்பு திரும்பியது.

இக்குழு மாலைதீவில் இரண்டு நாள் தங்கியிருந்து, வடக்கு - கிழக்கு நிலைமை பற்றி மாலைதீவு அரசுப்பிரதிநிதிகளுக்கு விளக்கமளித்தது.

சபாநாயகர் முகம்மது இக் குழுவுக்குத் தலைமை வகித்தார். (இ-எ)

## அலுவலகம் இடம் மாற்றம்

யாழ்ப்பாணம், ஆக 14
பரந்தனில் இயங்கி வந்த உதவி விவசாயப்பணிப்பாளர் (விதைகள்) அலுவலகம் தற்போதைய சூழ்நிலை காரணமாக வட்டக்கச்சி அரச பண்ணைக்கு இட மாற்றம் செய்யப்பட்டுள்ளது (இ)

## வடமராட்சி இடம் பெயர்ந்த ஆசிரியர்

யாழ்ப்பாணம், ஆக. 14
வெளிமாவட்டங்களில் இருந்து வடமராட்சிக்கு இடம் பெயர்ந்துள்ள ஆசிரியர்கள் தமது சம்பள முற்பணத்தைப் பெற நாளை காலை 10 மணிக்கு வடமராட்சி கோட்டக்கல்வி அலுவலகத்தில் சமுகமளிக்குமாறு கோரப்பட்டுள்ளது.
(இ - 3)

## முதலுதவிப்படை கூட்டம்

யாழ்ப்பாணம், ஆக. 14
றேடியன்ற் கல்வி நிலையப் பிரிவு சென். ஜோன்ஸ் அம்புலன்ஸ் முதலுதவிப்படையினருக்கான கூட்டம் இன்று செவ்வாய்க்கிழமை மாலை 5 மணிக்கு அரியாலையில் நடைபெறும். (இ-3)

## இன்றைய கூட்டம்

யாழ்ப்பாணம், ஆக 14
தனியார் கல்வி நிலைய இயக்குனர்கள், ஆசிரியர்கள் ஆகியோருக்கான கூட்டம் இன்று செவ்வாய்க்கிழமை காலை 9-00 மணிக்கு தமிழீழ ஆய்வு நிறுவனத்தினால கொக்குவில இந்துக் கல்லூரியில் நடத்தப்படும். [இ]

## இலங்கையரின் பாதுகாப்பு

கொழும்பு, ஆக. 14
அரபு நாடுகளில் தொழில் புரியும் சுமார் ஐந்து லட்சம் இலங்கையரின் பாதுகாப்புக் குறித்து அரசாங்கம் தீவிர கவனம் செலுத்தி வருவதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன. [இ-எ]

## செய்திச் சாரம்

## மூளைக் காய்ச்சலால் மரணம்

பச்சிலைப்பள்ளி, ஆக. 14
மூளைக்காய்ச்சலால் பாதிக்கப்பட்ட குடும்பப் பெண் ஒருவர் மரணமானார். இச் சம்பவம் எழுதுமட்டுவாளில் இடம்பெற்றது. சின்னத்தம்பி நாகம்மா (வயது 58) மரணமானவர் ஆவார். (இ-117)

## ஒத்துழைப்பு

யாழ். மாவட்ட இந்து இளைஞர் பேரவை நடாத்தி வரும் முகாமுக்கு சாவகச்சேரித் தொகுதியிலுள்ள இந்து இளைஞர் மன்றங்கள் பூரண ஒத்துழைப்பை வழங்கி வருகின்றன. (இ-75)

## வங்கியாளர் கூட்டம்

யாழ் - மாவட்டத்தில் உள்ள வங்கியாளர்களுக்கான கூட்டம் ஒன்று நாளை புதன் கிழமை காலை 10-00 மணிக்கு ஐ நா. அகதிகள் ஸ்தானிகராலயத்தில் நடைபெறுகிறது.

இலங்கை மக்கள் வங்கி பிராந்திய முகாமையாளர்களையும், மற்றைய தனியார் வங்கிகளின் முகாமையாளர்களையும் இக் கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு யாழ்-அரச அதிபர் வேண்டியுள்ளார். [இ 3]

## சார்க் நாடுகள் குழு வருகிறது

வடக்கு-கிழக்கு யுத்தத்தை நிறுத்துவதற்கான வழிவகைகளைக் கண்டறிவதற்காக சார்க் நாடுகளின் கல்விமான்கள் மற்றும் நிபுணர்கள் குழு ஒன்று அடுத்த மாதம் முதல் வாரத்தில் கொழும்புக்கு விஜயம் செய்ய உள்ளது

இத் தகவலை இக்குழுவில் இடம் பெறும் இந்தியாவின் முன்னாள் நீதியரசர் வி. ஆர். கிருஷ்ணய்யர் செய்தியாளரிடம் தெரிவித்தார். (இ-எ)

## ஹெலி சுட்டு மரணம்

கடந்த சனிக்கிழமை சுன்னாகத்தில் ஹெலி நடத்திய தாக்குதலில் கொல்லன் கலட்டி வாசியான வி. இளங்கோவன் (வயது 30) என்பவர் மரணமானார்.

இவர் தனது தாயாரோடு சுன்னாகத்தில் அகதியாகத் தங்கி இருந்தபோது இச்சம்பவம் இடம் பெற்றது.
(இ - 89)

# தமிழர் மீது குண்டு வீச்சு தடுக்க கலைஞர் முயற்சி!

கோயம்புத்தூர், ஆக.14
இலங்கை அரசு தமிழர் வாழும் பகுதிகளில் குண்டு வீசுவதைத் தீவிரப்படுத்தியுள்ளதாகத் தகவல் கிடைத்துள்ளது. இதுபற்றி மத்திய அரசுடன் பேசவுள்ளேன்,

முதலமைச்சர் மு. கருணாநிதி நேற்று கோயம்புத்தூரில் செய்தியாளர் மத்தியில் பேசுசையில் இவ்வாறு தெரிவித்தார்.

இலங்கையில் தமிழர் நிலைமை மிகமோசமாகி இருப்பதாக தகவல் வந்திருக்கிறது.

தமிழர்களைத் துரத்துவதற்காக அரசு பொதுமக்கள் வாழும் பகுதிகள் மீது தொடர்ந்தும் குண்டு வீசுமானால் அதைப்பார்த்துக் கொண்டு இந்தியா சும்மா இராது.

யாழ் குடாநாட்டிலிருந்து தமிழ்மக்களை வெளியேற்றிவிட்டு அங்கு குண்டுமாரி பொழிவதற்கும் சிங்கள அரசு திட்டமிட்டிருப்பதாகத் தெரிகிறது. இதனையும் நாம் சகித்துக்கொள்ள முடியாது. இந்தவிடயத்தை இந்திய மத்திய அரசுக்குத் தெரியப்படுத்தியிருக்கிறேன்.

அகதிகள் இலங்கையில் இருந்து தமிழகம் வரும் ஒரு சூழ்நிலையை இலங்கை அரசு ஏற்படுத்தியிருப்பதும் இந்தியா மீதான இலங்கையின் ஒருவித ஆக்கிரமிப்பேயாகும்,

இலங்கைத் தமிழ் அகதிகள் வருகையால் தமிழகத்தில் பொருளாதாரப் பிரச்சினைகளுடன், சட்டம் - ஒழுங்கு பராமரிப்பிலும் சிரமங்கள் ஏற்பட்டு உள்ளன மேலும் திரு. கருணாநிதி -இவ்வாறு கூறினார்.

# 31-ம் நாள் கண்ணீர் அஞ்சலி

அமரர்
உயர்திரு
★ நாகலிங்கம் ஞானவடிவேல் ★
அவர்கள்
(பிரபல வர்த்தகர் - மருதானை)

மலர்வு:
09 - 11 - 1937

உதிர்வு:
15 - 07 - 1990

''வேண்டாத சினேகிதரைத் தேடமாட்டாய்
வீணான பேச்சினிலே கலக்க மாட்டாய்
நீண்ட பெருஞ்செலவதனை விரும்பமாட்டாய்
நேரமொரு பகட்டதனை நாட மாட்டாய்
ஆண்டாண்டு காலமெல்லாம் குடும்பத்துக்காய்
அன்புமிகு சோதரர்க்காய் வாழ்ந்த ஐயா!
ஈண்டுனது ஆத்மாவின் சாந்திக் காக
இறையடியை வேண்டினோம் வேண்டினோமே''

எங்கள் தெய்வமே!

இரக்கமற்ற அரக்கர்களின் ஈனப்பிடியிலே ஈழம் சிக்கித் தவிக்கும் இந்த நேரத்தில் கொழும்பிலே மறைந்து விட்ட தங்களுக்கு எங்கள் கண்ணீரைக் காணிக்கையாக்குகின்றோம்.

தங்கள் ஆத்ம சாந்திக்காகப்
பிரார்த்திக்கும்
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், சகோதரர்கள்.

11 ஆம் வட்டாரம்,
புங்குடுதீவு.

(14027)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வங்காலையில் ராணுவ முகாம்; பெருமளவு மக்கள் இடம்பெயர்வு

யாழ்ப்பாணம், ஆக. 14

மன்னார் வங்காலைப் பகுதியில் ஸ்ரீலங்கா இராணுவம் முகாம் அமைத்துள்ளது. இதைத் தொடர்ந்து அப்பகுதியில் இருந்து மக்கள் இடம்பெயர்ந்து வருகின்றனர்.

இராணுவம் தள்ளாடி முகாமில் இருந்து கடந்த வியாழக்கிழமை வங்காலைக் கிராமத்தை நோக்கி வந்தது.

இளம் வயதினர் பலர் அங்கிருந்து நானாட்டன் பகுதிகளுக்கு சென்று நேற்று யாழ்ப்பாணம் வந்தனர்.

பொதுமக்களின் வீடுகளை இராணுவத்தினர் உடைத்து அங்கு முகாமிட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

# கூலிப்படை மூலம் அரசு முஸ்லிம்களை கொல்கிறது!

## புலிகள் பிரமுகர் குற்றச்சாட்டு

லண்டன், ஆக. 14

வடக்கும் கிழக்கும் நிரந்தரமாக இணைந்துவிடாமல் பார்த்துக்கொள்ளவும்-

முஸ்லிம்களின் உதவியுடன் கிழக்கை இராணுவக் கட்டுப்பாட்டில் பூரணமாகக் கொண்டுவரவும்-

கூலிப்படைகளைக் கொண்டு முஸ்லிம் மக்களை இலங்கை அரசு படுகொலை செய்துவருவதாக விடுதலைப்புலிகள் பிரமுகர் திலகர் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

-இப்படி ஏஜென்ஸிச் செய்திகள் தெரிவித்தன.

''இன்றைய விடுதலைப் போராட்டத்தில் முஸ்லிம் மக்களின் பூரண ஒத்துழைப்பைப் பெற்றுவரும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் முஸ்லிம்களை ஏன் கொல்ல வேண்டும்?''—என்று திலகர் செய்தியாளர்களிடம் கேள்வி எழுப்பினார்.

முஸ்லிம்களைக் கொலை செய்வதன் பின்னால் உள்ள சதித் திட்டத்தை உலகம் விரைவில் புரிந்து கொள்ளும் என்றும் அவர் சொன்னார். (உ-எ)

# மரண அறிவித்தல்கள்

## முருகேசம்பிள்ளை சுவாமிநாதன்

பருத்தித்துறை வியாபாரிமூலையைச் சேர்ந்தவரும் தற்போது 15/4, முருகேசர் ஒழுங்கை நல்லூரில் வசித்தவருமான திரு. முருகேசம்பிள்ளை சுவாமிநாதன் அவர்கள் 12 – 8 – 1990 அன்று சிவபதமெய்தினார். இவர் காலஞ்சென்ற மனோன்மணி அவர்களின் அன்புக் கணவரும், சிவபாலனின் (கணக்காளர் கச்சேரி, யாழ்ப்பாணம்) அன்புத் தந்தையும், இரத்தினாவின் அன்பு மாமனாரும், திருமதி வாசுகி பாலகாந்தன், செந்தூரன், ஸ்ரீஜனனி, வித்யா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் 13 - 8 - 1990 அன்று நடைபெற்றது.

தயவுசெய்து இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்

நல்லூர். சு. சிவபாலன்

(14030)

## திருமதி லீலா அழகரத்தினம்

[சுண்டிக்குளி]

திருமதி லீலா (கூவர்) அழகரத்தினம் (கிளாஸ் கவுஸ், யாழ்ப்பாணம்) 12 – 08 – 90 அன்று மறுமைக்குள் பிரவேசித்தார். இவர் மறைந்த அழகரத்தினத்தின் அன்பு மனைவியும்; தர்மராஜன் கூவர், தனமுத்து ஆகியோரின் சகோதரியும் (மறைந்த யோகம் முத்தையாவின் பெறாமகளும்), சந்திரா, மகிபா, சாந்திகுமார் ஆகியோரின் சிறிய தாயாருமாவார். அன்னாரின் நல்லடக்கம் சங்கானை தென்னிந்திய திருச்சபைச் சேமக்காலையில் இடம்பெற்றது. உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் இத்தகவலை அறியத்தருகிறோம்.

தகவல்:

திருமதி சந்திரா தருமரத்தினம்.

''மனோரஞ்சிதம்''
இறக்கா வீதி,
சுண்டிக்குளி.

[14029]

## திருமதி கண்ணுத்துரை கண்மணி

புங்குடுதீவு 5ம் வட்டாரத்தைச் சேர்ந்த திருமதி கண்ணுத்துரை கண்மணி 12 – 8 - 90 ஞாயிறு இரவு காலமானார்.

இவர் கண்ணுத்துரையின் அன்பு மனைவியும், மகேஸ்வரி, ஹரிதாஸ் (சுவிஸ்), காலம் சென்ற தர்மதாஸ், தேவதாஸ் (தேவன்) ஆகியோரின் அன்புத் தாயாரும்; சிவலிங்கம், லோகேஸ்வரி, பரமேஸ்வரி, ஆகியோரின் மாமியாரும் ஆவார்.

அன்னாரின் ஈமைக்கிரியைகள் 14 – 8 – 90 செவ்வாய்க்கிழமை பகல் 11 மணியளவில் புங்குடுதீவு கேரதீவு மயானத்தில் நடைபெறும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் இவ்வறிவித்தலை ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:

திரு. சிவலிங்கம்

புங்குடுதீவு – 5

[14028]

# 15 சிங்களவர் கொலை

கொழும்பு, ஆக. 14

புல்மோட்டையில் மீன் பெட்டிகளை லொறிகளில் ஏற்றுவதில் ஈடுபட்டிருந்ததாகக் கூறப்படும் சிங்களவர் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் 15 சிங்களவர் உயிரிழந்தனர் என்று ஏஜென்ஸி செய்திகள் தெரிவித்தன. (உ-எ)

# சிப்பாய்கள் 12 பேர் பலி

யாழ்ப்பாணம், ஆக. 14

படையினரால் கைவிடப்பட்ட தலைமன்னார்முகாமை விடுதலைப் புலிகள் சோதனை நடத்திய வேளையில், அவர்களை கடற்படையினரும் இராணுவத்தினரும் சுற்றி வளைத்து தாக்குதல் நடத்த முயன்றதாக அறியவருகிறது.

விடுதலைப் புலிகள் எதிர்த் தாக்குதல் நடத்தியதில் 12 சிப்பாய்கள் பலியாகியதாகவும், 15 சிப்பாய்கள் காயமுற்றதாகவும் விடுதலைப் புலிகள் வட்டாரங்கள் தெரிவித்தன. [உ-9]

# வடமராட்சியில் பொம்மர் தாக்கு

யாழ்ப்பாணம், ஆக.14

நேற்று முன்தினம் வடமராட்சிப் பகுதியைச் சுற்றி வட்டமிட்ட பொம்மர்கள் தொண்டமனாறு யாக்கரைப்பகுதிகளில் குண்டுகளை வீசின. இந்தத் தாக்குதலினால் பெரும் சேதம் ஏதும் ஏற்பட்டதாகத் தெரியவரவில்லை. (உ-5-9)

# அபிப்பிராயம் கோருகிறார் பிரேமா

கொழும்பு, ஆக. 14

அதிகாரப் பரவலாக்கல் தொடர்பான ஆறு விடயங்கள் குறித்து இவ்வாரம் நடைபெறவிருக்கும் சர்வகட்சி மாநாட்டின்போது கருத்து வெளியிடும்படி அனைத்து அரசியல் கட்சிகளையும் ஜனாதிபதி பிரேமதாஸா கேட்டிருக்கிறார்.

வடக்கு – கிழக்கு இணைப்பு அதற்கான சர்வசன வாக்கெடுப்பு, சிறுபான்மையினரின் உரிமைகளைப் பாதுகாத்தல், மாகாணசபை எல்லைகள் ஆகிய விடயங்கள் பற்றியே கருத்துக் கேட்கப்பட்டிருக்கிறது. [உ-எ]

## தலைமன்னார்..

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

யாக மதவாச்சிக்குச் சென்றனர்.

வழியில் அவர்கள் பாடசாலைக் கட்டடங்கள் மற்றும் சில வீடுகளைச் சேதப்படுத்தியதாகத் தெரிவிக்கப்பட்டது. (உ-9)

## வீரமுனையில்---

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

வீரமுனைச் சம்பவம் அமைந்ததாக கொழும்பில் பாதுகாப்பு அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன.

இதனிடையில் ஏறாவூரில் இடம்பெற்ற சம்பவங்களில் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 173ஆக அதிகரித்தது என்றும் மற்றொரு செய்தி தெரிவித்தது.

வீரமுனையிலும் ஏறாவூரிலும் ஊரடங்குச் சட்டம் அமுலில் இருப்பதாகவும் அறிவிக்கப்படுகிறது. [உ-எ]

## அரசு---

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

விட்டதாக வர்த்தக வட்டாரங்கள் உதயனுக்குத் தெரிவித்தன.

யாழ். மாவட்டத்துக்கு தேவைப்படும் உணவு மற்றும் பொருட்களின் மொத்த அளவு, இதுவரை அரசு அனுப்பியுள்ள உணவுப் பொருட்களின் அளவு ஆகியவை பற்றிய முழு விபரமும் நாளை [illegible] வெளியாகும். [அ-3]

# நகரில் அம்புலன்ஸ் மீது ஹெலிதாக்கு; சாரதி காயம்

யாழ்ப்பாணம், ஆக. 14

யாழ். நகரில் சென்று கொண்டிருந்த யாழ். ஆஸ்பத்திரி அம்புலன்ஸ் ஒன்றின் மீது நேற்றுக்காலை 9 மணியளவில் ஹெலிக்கொப்டர் ஒன்றிலிருந்து தாக்குதல் நடத்தப்பட்டது.

இதனால் அம்புலன்ஸ் பெரிய சழிவு வாய்க்கால் ஒன்றுக்குள் குடை சாய்ந்தது. அதன் சாரதி படுகாயமுற்றார்.

பருத்தித்துறை வீதி — விக்டோரியா வீதிச் சந்தியில் உள்ள மதகினுள்ளேயே அம்புலன்ஸ் குடை சாய்ந்தது. (உ-5)

## தலைமையக உரிமை கோரி

# ஜெயலலிதா- திருநாவுக்கரசு இருவரும் உண்ணாவிரதம்

சென்னை, ஆக. 14

அ.தி.மு.க. தலைமையலுவலகத்தை தனது அணியிடம் ஒப்படைக்க வேண்டும் என்று கோரி செல்வி ஜெயலலிதா நேற்று காலவரையறையற்ற உண்ணாவிரதத்தை ஆரம்பித்தார்.

சென்னையில் உள்ள அவரது போயஸ் கார்டன் இல்லத்தில் அவர் உண்ணாவிரதம் இருந்து வருகிறார்.

போட்டி அ. தி. மு. க. வின் பொதுச் செயலாளரான திரு. எஸ். திருநாவுக்கரசுவும் தலைமையகத்தைத் தனது அணியிடம் ஒப்படைக்க வேண்டும் என்று கோரி தொடர் உண்ணாவிரதம் ஒன்றை நேற்று ஆரம்பித்தார்.

திரு. திருநாவுக்கரசு அணியினர் கடந்த ஞாயிறு அ. தி. மு. க. தலைமையகத்துக்குள் நுழைந்து அதனைக் கைப்பற்ற முயற்சித்ததும்—

அப்போது இரண்டு அணிகளின் தொண்டர்களுக்கிடையே கைகலப்பு ஏற்பட்டதும் தெரிந்தவையே.

பொலீஸார் தலைமையகத்தைச் சீல் செய்ததுடன், அதன் திறப்புகளையும் எடுத்துச் சென்றனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (இ-எ)

# மரண அறிவித்தல்கள்

## வேலுப்பிள்ளை இளையதம்பி இரத்தினேஸ்வரன்

வேலுப்பிள்ளை இளையதம்பி இரத்தினேஸ்வரன் 23.07.90 இல் கொழும்பில் காலமானார். இவர் அராலி வடக்கைச் சேர்ந்த காலஞ்சென்ற இளையதம்பி. நேசம்மாவின் புதல்வரும், அனந்தலட்சுமியின் அன்புக் கணவரும், ரமேஸ், சுரேஸ், சுதர்சன் ஆகியோரின் அன்புத் தந்தையும்; காலஞ்சென்ற வே.இ. இராசசிங்கம், வே. இ. புவனேஸ்வரன், திருமதி மங்களேஸ்வரி செல்லப்பா ஆகியோரின் அன்புச்சகோதரரும்; நாரந்தனை வடக்கைச் சேர்ந்த திருமதி சரஸ்வதி நல்லதம்பியின் மூத்த மருமகனும்; தற்போது திருநெல்வேலியை வசிப்பிடமாகக் கொண்டவரும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 24. 07. 90 இல் கொழும்பு கனத்தை மயானத்தில் நடைபெற்றது என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

தகவல்;

திருநெல்வேலி. மனைவி, பிள்ளைகள்

(1363?)

## திருமதி இரத்தினம் ஜேம்ஸ்

திருமதி இரத்தினம் ஜேம்ஸ் காலமானார். இவர் காலஞ்சென்ற B. A. ஜேம்ஸ் இன் அன்பு மனைவியும் திருமதி வசந்தி மரியதாசன் (பிரான்ஸ்), திரு. சந்திரன் ஜேம்ஸ் [ஜேர்மனி], திருமதி லலிதா ரவீந்திரன், திரு. இந்திரன் ஜேம்ஸ் (பிரான்ஸ்) என்பவர்களின் அன்புத் தாயாரும், செல்வி நீற்றாவின் வளர்ப்புத் தாயும், திரு. I. மரியதாசன் (அதிபர் ம. வி. மல்லாகம்), திருமதி சந்திரவதனி (ஜேர்மனி), திரு. ரவீந்திரன் யுவக்கீன் (தொழில்நுட்ப உத்தியோகத்தர், சவுதி அரேபியா) திருமதி பெனோ றாஜி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமியாரும்; நிகால், நெவில். டிலாந்தி, டிலான், குளோற்றில், ஜெலன், சிரோமி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், திருமதி சிசிலியா யோண், திரு. A. E. பிறின்ஸ் (உதவி முகாமையாளர். அரசாங்க மரக்கூட்டுத்தாபனம்), காலஞ்சென்ற திரு. A. விஜயன் ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார். அன்னாரின் பூதவுடல் 14-8-90 செவ்வாய்க்கிழமை பி. ப. 3 மணிக்கு நல்லடக்கத்திற்காகப் புனித கொஞ்சேஞ்கி மாதா சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்;

I. மரியதாசன்

58, கோவில்வீதி, யாழ்ப்பாணம் [14033]

## வஸ்தியாம்பிள்ளை யேசுதாசன்

வஸ்தியாம்பிள்ளை யேசுதாசன் 8-8-90 அன்று அகால மரணமானார்.

இவர் நாரந்தனையைச் சேர்ந்த காலஞ் சென்ற வஸ்தியாம்பிள்ளை இக்னேசியஸ்பிள்ளையின் அன்பு மகனும் பிறிஜ்ஜெற் ஜெயமணியின் அன்புக் கணவரும், றேமன் (டென் மார்க்), எட்மன் (மே. ஜெர்மனி), டொறீனா, மறீனா ஆகியோரின் அன்புத் தந்தையாரும், றேமன் ஆனந்தியின் (டென் மார்க்) அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 9 – 8– 90 அன்று நாரந்தனை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி அறியத்தருகிறோம்.

தகவல்:

நாரந்தனை மத்தி,
ஊர்காவற்றுறை

யூட்கொட்வின்.

(14032)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிக்கேஷன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 14-08-1990 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org